# மணநாள் வாழ்த்து! (20-08-2020)

இன்னிய வாழ்வின் இயன்நிலைப் பயனாய்,
மன்னிய மரபுகள் காக்கும் நிலையாய்,
கண்நிகர் வாழ்வின் மணாளனாக, சீருயர்,
நன்மகன் **தீலிபன்** தானும் எங்களின் செல்வி,

பொன்மகள் **ரம்யா** என்னும் **சந்தான லஷ்மி**யை
நன்நாள் தன்னில் கைத்தலம் பற்றிப்
பொன்நிகர் வாழ்வில் பொலிந்து ஏகி,
கொண்டதாம் கொடையாய் மகனும் பிறந்து,

கண்டதாம் வாழ்வின் பத்து ஆண்டுகள்!
தண்டமிழ் போலே தழைந்து வளர்ந்து,
கண்நிகர் பெருமை யாவும் கண்டே மகிழ்ந்து,
மண்ணுலகில் வாழ இற்றை நாளில் வாழ்த்துவோமே!
அன்புடன்,
சித்திகள், சித்தப்பாக்கள், தம்பிகள்

